பொன்னீலன் கடிதங்கள்

செ. திவான்

பொன்னீலன் கடிதங்கள்

செ.திவான் M.A.,M.Phil.,

நூலாசிரியரின் 124 வது நூல்

தலைப்பு : பொன்னீலன் கடிதங்கள்

பொருள் : இலக்கியம்

ஆசிரியர் : செ.திவான்

பதிப்பு ஆண்டு : 2020, ஜூன்

உரிமை : ஆசிரியருக்கே

பக்கங்கள் : 64

அச்சிட்டோர் : குமரேசன், சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி. செல்: 9443379005

சமர்ப்பணம்

தினமணி ரம்ஜான் மலரில் 2003 இல் ஆய்வறிஞர் என்ற பட்டத்தை எளியேனுக்குச் சூட்டிய பாசத்திற்குரிய சாகித்திய அகாதெமி விருது பெற்ற **பிரபஞ்சன்** முஸ்லிம் முரசு வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் அண்ணன் தோப்பிலுடன் சென்றபோது சதாவதானி செய்குத் தம்பி பாவலர் பற்றி பேசியதில் சிறு திருத்தஞ் சொன்னபோது அன்போடு அதனை ஏற்றுக்கொண்ட சாகித்திய அகாதெமி விருது பெற்ற நெல்லை மாவட்டம் திப்பணம்பட்டி **சு.சமுத்திரம்** ஆகியோருக்கு

– ரெகான் சுலைமான் பதிப்பகம்

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

– செ. திவான்

ரெகான் சுலைமான் பதிப்பகம்

106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி– 627002
போன்: 0462–2572665

பொன்னீலன் - பீடிகை

உலகின் பன்முகத்தை தனது படைப்புக்களில் பதிய வைத்த மனித குல விடுதலைக்குப் போராடும் மாமனிதரான அண்ணன் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நல்லவர்; நாவலாசிரியர் பொன்னீலன்.

பொன்னீலனின் உறவுகள்

தந்தை	: திரு.சிவ.பொன்னீல வடிவு என்ற சீனி
தாய்	: திருமதி அ.அழகிய நாயகி அம்மாள் என்ற பெரிய தங்கம்
அப்பா தாத்தா	: திரு.சிவசங்கர பெருமாள் (அம்மன் கொண்டாடியார்)
சகோதரிகள்	: செல்வி.ரெங்கநாயகி என்ற ரெங்கபாய் (மறைவு 1957)
	: செல்வி : தில்லைநாயகி என்ற ராஜம் (மறைவு 1960)
சகோதரர்கள்	: செல்வன்.சிவசங்கரப் பெருமாள் பாஸ்கரன் (மறைவு 1946)
	: செல்வன் : ஸ்ரீநிவாசன் (மறைவு 1948)
துணைவி	: திருமதி.அ.உமாதேவி என்ற அம்மாக்கனி
மக்கள்	: திருமதி.க.ப.அழகுநீலா ஜெயராம் என்ற அமுதா B.S.M.S.
	: திருமதி.க.ப.அனிதா அசோக்குமார் M.Sc., M.Phil.,
மருமக்கள்	: திரு.நா.ஜெயராம் B.S.M.S.,
	: திரு.ஆ.அசோக்குமார் M.E.,
பேத்தி	: செல்வி.பிரியதர்சினி
பிறந்த நாள்	: 15.12.1940
கல்வி	: எம்.ஏ.எம்.எட்.
பணி	: தமிழ்நாடு கல்வித்துறைப் பணி முதன்மை கல்வி அதிகாரி 31.12.1998 (ஓய்வு)

பொன்னீலனின் வாழ்க்கைப் பயணங்கள்

1945 – 1956	:	அரசு உயர்நிலைப்பள்ளி, மணிகட்டிப் பொட்டல்
1957 – 1960	:	ஸ்கார்ட் கிறிஸ்துவக் கல்லூரி – நாகர்கோவில் இளங்கலை (இயற்பியல்) பட்டப்படிப்பு
1960	:	வருவாய்த்துறை – எழுத்தர் பணி
1961 – 62	:	தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி – மதுரை.
1962 June - July	:	விருதுநகர் இந்து நாடார் உயர்நிலைப்பள்ளி மதுரை.
18.07.1962 - 1966	:	குறத்தியறை – அரசு உயர்நிலைப்பள்ளிப்பள்ளி அறிவியல் ஆசிரியர் பணி (நான்கு ஆண்டுகள்)
1962 December	:	முதன் முதலாகத் தோழர் ப.ஜீவானந்தத்தை குறத்தியறையில் சந்தித்தது
1964	:	முதன் முதலாக சுந்தர ராமசாமியைச் சந்தித்தது.
1966 – 1969	:	பள்ளித் துணை ஆய்வாளராக நாகலா புரத்தில் பொறுப்பேற்று பணியாற்றியது.
1966 September	:	முதன் முதலாக எட்டையபுரம் பாரதி மணி மண்டபத்திற்குச் செல்லுதல்
1967	:	பூதலபுரம் வேலுச்சாமி தேவரை சந்தித்தது.
1967	:	பேராசிரியர் அ.சீனிவாச ராகவன் நட்பு / அவர் மணி விழாவில் கலந்து கொண்டது.
1967	:	பேராசியர் நா.வானமாமலை சந்திப்பு
10.09.1967	:	திருமணம்.
21.12.1968	:	மகள் அழகு நீலா பிறந்தது
1969 to *1971*	:	பரிவல்லிக்கோட்டை – ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பொறுப்பு.
1969	:	ஓனமாக்குளம் ஏ.ஜி. பெருமாள் நட்பு

1971	:	பழவூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் அறிவியல் / கணித ஆசிரியராகப் பணி.
1971 to 1976	:	அரசு உயர்நிலை ஆரல்வாய்மொழி – ஐந்தாண்டுகள் ஆசிரியர் பணி.
1971	:	தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் – குமரி மாவட்ட அமைப்பை புதுப்பித்தல்.
	:	தோழர் சி.சொக்கலிங்கத்துடன் சந்திப்பு.
1972	:	தமிழ் இலக்கிய உலகத்தோடு அறிமுகம். தாமரையில் '**ஊற்றில் மலர்ந்தது**' வெளிவருதல்.
7.11.1973	:	இரண்டாவது மகள் அனிதா பிறப்பு
1975	:	குமரி இலக்கிய முகாம் ஏற்பாடு செய்தல்.
	:	கரிசல் வெளியீடு
1976 – 1977	:	தூய சவேரியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் (பாளையங்கோட்டை) கல்வியியல் பட்ட மேற்படிப்பு (M.Ed.,)
	:	பேராசிரியர் நா.வனமாமலை மணி விழா நடத்தும் பணியில் ஈடுபடுதல்.
1977	:	தாமரைக்குளம் – நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியர் பொறுப்பு
1977 – 1979	:	குளித்துறை – மாவட்டக் கல்வி அலுவலகத்தில் அறிவியல் ஆய்வாளர்
1979	:	"ஊற்றில் மலர்ந்தது" – குறுநாவல் மகேந்திரன் இயக்கத்தில் "பூட்டாத பூட்டுக்கள்" என்ற பெயரில் திரைப் படமாக பஞ்சு அருணாசலம் தயாரித்தார்
1980 – 81	:	புலியூர் குறிச்சி நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றுதல்.
1982 (Six Months)	:	முன் சிறையில் பள்ளித்துணை ஆய்வாளர்
1982 – 1983	:	சுசீந்திரம் – பள்ளித் துணை ஆய்வாளர்
	:	"ஜீவா என்றொரு மானுடன்", "தமிழ் இலக்கியமும் திராவிட சித்தாந்தமும்" எழுதியது.
	:	கேரளத்தின் முதல் கம்யூனிஸ்டு தலைவர் சகாவு கிருஷ்ணபிள்ளை துணைவியார் திருமதி.தங்கம்மாவின் நட்பு.

1982	:	‘கரிசல்’ நாவலுக்கு தமிழக அரசின் பரிசு தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் வழங்கினார்.
1984	:	முதுகலை (தமிழ்) தேர்ச்சி பெறல்
1983 - 88	:	புதுக்கோட்டை மாவட்டம் - அத்தாணி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்
1984	:	“ஜீவா என்றொரு மானுடன்” நூலுக்கு தமிழக அரசின் பரிசு வழங்கப்பட்டது.
	:	மார்க்சிய அழகியல் மொழிபெயர்ப்புக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பரிசு.
1985	:	குமரியிலிருந்து சென்னை வரை சமாதான நடைப்பயணம் மேற்கொள்ளல்.
	:	டென்மார்க் பயணம்
	:	இரஷ்யாவில் மாஸ்கோ, லெனின் கிராடு, தாலின் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்தல்.
	:	மாமேதை லெனினின் பூத உடலை தரிசனம் செய்தல்.
	:	புதுக்கோட்டை மாவட்டக் கலை இலக்கியப் பெருமன்ற அமைப்பு பணிகளில் ஈடுபடுதல்
1988 April	:	பாண்டிச்சேரி 5–வது மாநாட்டில் க.இ.பெ.ம. பொதுச் செயலாளராகத் தேர்வு
1988 - 92	:	மொடக் குறிச்சியில் வயது வந்தோர் கல்வித் திட்ட அலுவலராகப் பணியாற்றுதல்
1991	:	‘புதிய தரிசனம்’ நாவல் எழுதி முடித்தல்.
1991 December	:	கோயமுத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற 6வது மாநில மாநாட்டில் மீண்டும் பொதுச் செயலராக தேர்ந்தெடுக்கப்படுதல்
	:	தவத்திரு.குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி நூல் எழுதி முடித்து மாநாட்டில் வெளியிடல்
1992 November	:	‘புதிய தரிசனம்’ - நாவல் வெளியிடுதல்
1992 & 93	:	வயலூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியர்.

1993 – 95 : *களியக்காவிளை – அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றுதல்.*
1993 December 10 : *அழகு நிலா திருமணம்.*
15.12.1994 : *புதிய தரிசனங்கள் நாவலுக்கு 'சாகித்ய அகாதமி' விருது அறிவிக்கப்பட்டது.*
1995 – 98 : *திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழத்தின் செனட் உறுப்பினராக நியமனம்.*
1996 : *புது டெல்லியில் தேசிய முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டில் கலந்து கொள்ளுதல்.*
1995 – 96 : *சென்னை – பள்ளிக் கல்வித் துறையில் உதவி இயக்குநராகப் பணியாற்றுதல்*
: *சென்னை மாவட்ட கலை இலக்கியப் பெருமன்ற அமைப்பினைப் புதுப்பித்தல்*
1996 September : *இலங்கை இலக்கியப் பயணம்*
1997 : *கோவில்பட்டி மாவட்டக் கல்வி அலுவலராகப் பணியாற்றுதல்.*
1997 Dec.-May98 : *கோயமுத்தூர், திருமூர்த்தி நகர், மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று பணியாற்றுதல்.*
1998 Dec.-May98 : *முதன்மை கல்வி அலுவலர்; கோயமுத்தூர் மாவட்டம்.*
: *"எழுத்து வேந்தர்" – சிறப்பு கௌரவம்*
31.12.1998 : *அரசு பணியிலிருந்து ஓய்வு*
08.1999 : *சென்னையில் நடந்த தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற 7வது மாநில மாநாட்டில் மீண்டும் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்படுதல்.*

(மானுடப் பறவை' – பதிப்பாசிரியர்கள் இரா.இளங்கோவன், பெ.கணபதி சுப்பிரமணியன் நா.இராமச்சந்திரன், சி.சொக்கலிங்கம், நாகர்கோவில் 2001, பக்கம் 251 – 255).

பொன்னீலன் - 80

1999க்குப் பிறகான வாழ்க்கை பற்றிய குறிப்புகள் பொன்னீலன் 80 என்ற நூலில் கொஞ்சம் உள்ளது.

ராம் தங்கம்

ராம் தங்கம் தொகுத்து யாவரும் பப்ளிஷர்ஸ் நவம்பர் 2019 இல் வெளியிட்ட 94 பக்கங்களைக் கொண்ட நூலில் பொன்னீலன் குறித்த 17 கட்டுரைகள் வெளிவந்துள்ளது.

என்னைச் செதுக்கியவர்கள்

பொன்னீலன் – 80 – எழுத்துலகில் 55 விழா நாகர்கோவிலில் 16.11.2019 காலை முதல் மாலை வரை நடைபெற்றது. தமிழகத்தின் பிரபலமான எழுத்தாளர்கள் பலர் அங்கே வந்திருந்தனர். விழா சிறப்பாக நடைபெற்றது.

காவ்யா பதிப்பகம்

சென்னை காவ்யா பதிப்பகம் மூலம் **என்னைச் செதுக்கியவர்கள்** *என்ற பொன்னீலனின் தன் வரலாறு நூல் வெளிவந்துள்ளது. 'கரு'வில் துவங்கி 'முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் நான் 'எனும் 153 தலைப்புகளில் 695 பக்கங்களில் 800 ரூபாய் விலையில் அந்த நூல் வெளிவந்துள்ளது.*

கிழக்கு வாசல் உதயம்

கிழக்கு வாசல் உதயம் மாத இதழில் பொன்னீலன் 60 மாதங்களுக்கு மேலாக எழுதிய அந்தத் தொடர் நூலாக வந்துள்ளது.

இன்னும் எழுதவேண்டும்

அன்பிற்குரிய அண்ணன் பொன்னீலன் இன்னும் நிறைய எழுத வேண்டியுள்ளது. அவர்கள் எழுதிட வேண்டும் என்பது எளியேனது அவா.

பூட்டமறுத்த ஓட்டு

என்னைச் செதுக்கியவர்கள் நூலில் பூட்ட மறுத்த பூட்டு (பக்கம் 220 – 223) பொன்னிலனின் சினிமாத்துறை அனுபவங்கள்.

கண்ணதாசன்

கண்ணதாசனது ''**கண்ணதாசன்** இதழில் **உறவுகள்** என்ற சிறுகதை அது சினிமாவாக ஆனது. இயக்குநர் மகேந்திரன். ஸ்ரீசரசாலயா நிறுவனத்தார் தயாரிப்பு அது '**பூட்டாத பூட்டுகள்**' என்ற தலைப்பில் படமாக 1980 இல் வெளிவந்தது. படம் ஓடவில்லை. சினிமாக்கதை ஆசிரியர் பொன்னீலன் என்பதற்காகப் பாராட்டவில்லை. சிறந்த நாவலாசிரியர் சிறுகதையாளர் திரைப்படமானபோது அது சின்னாபின்னமாகிப் போனது.

17.3.2020

17.3.2020 காலை 10.40 மணிக்கு மணிக்கட்டிப் பொட்டலில் (நாகர்கோவில்) வாழ்ந்து வரும் எனது பிரியத்திற்குரிய தோழர் பொன்னீலனிடம் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டேன் (04652 - 250328) தொலைபேசியில் பேசினார்கள். எனது துணைவியாரின் தந்தையார் மாமனார் நெல்லை மாவட்ட தெற்கு கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்து மறைந்த **கல்விமான் சுலைமான்** குறித்து கருத்து கேட்டேன்.

கல்விமான் சுலைமான்

"ஓ நன்றாகத் தெரியும்! மூத்த கல்வியாளர் மதிப்புமிக்கவர்; ரொம்ப நேர்மையானவர்; கல்வியாளர்களிடம் அன்பாக இருப்பார் வேலை பார்த்த காலங்களில் மூத்த கல்வியாளராக நடந்து கொள்வார். பெரிய மனிதர். ஓய்வு பெற்றபின் எந்தப் பணியிலும் அவர் ஈடுபடவில்லை. எனக்கு மிகுந்த சீனியர்" அவர் என்று அழகுறச் சொன்னார் பொன்னீலன்.

17.5.2020

தினமணி இந்த வாரம் 'கலா ரசிகன்' எழுதும் பகுதியில் 'சுடர்கள் ஏற்றும் சுடர்' குறித்த பொன்னீலனின் நா.வானமாமலை பற்றிய நூல் குறித்து வந்திருந்தது.

அத்தோடு 17.5.2020 அன்று அவர்கள் நெஞ்சுவலி ஏற்பட்டு, அவருடைய மகள் மருத்துவர் அமுதா குலசேகரம் மூகாம்பிகை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவரை அழைத்துச் சென்று; ஆஞ்சியோ பிளாஸ்ட் மூலம் ரத்தக்குழாய் அடைப்புகள் அகற்றப்பட்டு அவர் நலமுடன் மணிக்கட்டிப்

பொட்டலிலுள்ள வீட்டுக்குத் திரும்பி விட்டார். நலமாக இருப்பதாக அவரே தொலைபேசியில் தெரிவித்தார் என்ற செய்தி காணப்பட்டது. (தினமணி தமிழ்மணி 31.5.2020 பக்கம் 6)

31.5.2020

பத்திரிகைபடித்தவுடனேயே 31.5.2020 காலை 9.15 மணியளவில் தோழர் பொன்னீலனிடம் அலைபேசியில் (9443791644) பேசினேன். நலமுடன் இருப்பதாகத் தெரிவித்தார். அய்யா புதுமைப்பித்தன், தொ.மு.சி. சுந்தர ராமசாமி பற்றி நூல் எழுதி முடித்துவிட்டேன். உங்களைப் பற்றிச் சிறு நூல் எழுதிக் கொண்டிருக்கிறேன். மேஜை முழுவதும் நீங்கள் எழுதிய நூல்கள். இன்று தினமணியில் செய்தி பார்த்தேன் என்றேன்.

நூறாண்டு வாழ்க

"நீங்கள் நூறாண்டு வாழ்வாங்கு வாழவேண்டும்" என்ற எனது வேண்டுதலைத் தெரிவித்தேன். மகிழ்ச்சி என்றார்கள். மன திருப்தியுடன் உரையாடலை நிறுத்திக் கொண்டேன். நீடுழி வாழவேண்டும் பண்பாளர் பொன்னீலன்.

கரிசல்

1976 மே மாதம் பேராசிரியர் நா.வானமாமலை அவர்களது அணித்துரையோடு பொன்னீலனின் **கரிசல்** நாவல் வெளிவந்தது. 431 பக்கங்களைக் கொண்ட அந்த நாவல் இதுவரை பல பதிப்புக்களைக் கண்டுள்ளது.

இது தமிழக அரசின் பரிசு பெற்ற நாவலாகும்.

அக்டோபர் 1979

15.10.1977 தேதியிட்ட பேராசிரியர் நா.வானமாமலையின் முன்னுரையோடு பொன்னீலனின் **'கொள்ளைக்காரர்கள்'** நாவல் 178 பக்கங்களில் வெளிவந்தது.

ஜெயகாந்தன்

ஞானபீட விருது பெற்ற ஜெயகாந்தன் ஆசிரியராக **கல்பனா** இதழில் அக்டோபர் 1979 (மலர் 1 இதழ் 6 விலை ஒரு ரூபாய் (நிர்வாக ஆசிரியர் அறந்தை நாராயணன்) பக்கம் 17 முதல் பக்கம் 79 வரை வெளிவந்த நாவல் புதிய மொட்டுகள்.

புதிய மொட்டுக்கள்

தொடர்ந்து பல பதிப்புகள் பொன்னீலனின் நாவலானி புதிய மொட்டுகள் வந்து கொண்டே இருக்கிறது.



புதிய மொட்டுகள்
பொன்னீலன்

தேடல்

மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையை மையமாகவும் அவர்களது கடலோர வாழ்வை நிலைக்களமாகவும் அமைத்து பொன்னீலனின் தேடல் நாவல் 93 பக்கங்களில் 1985 மார்ச்சில் வெளிவந்தது.

புதிய தரிசனங்கள்

ஆகஸ்ட் 1992 இல் 3 பாகங்களாக முதல் பாகம் 427 பக்கங்கள் இரண்டாம் பாகம் 428 முதல் 685 பக்கங்கள், மூன்றாம் பாகம் 686 முதல் 1193 பக்கங்கள் தனித்தனியாக வெளிவந்தது. பின்னர் அந்த நூல் 1994 இல் சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றது. கடுமையான அரசியல் விமர்சனங்களைக் கொண்ட நாவல் அது. 2000 இல் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முடிவெடுத்தார். புதிய தரிசனங்கள் தமிழில் நான்காவது பதிப்பாக ஒரே புத்தகமாக 2018 டிசம்பரில் ரூ 1200 விலையில் 1193 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

New Dharshans

புதிய தரிசனங்கள் நாவல் New Dharshans என்ற தலைப்பில் சாகித்ய அகாதமியின் வழியாகவே ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. அதன் மொழி பெயர்ப்பில் பொன்னீலன் பட்ட சிரமங்கள் ஏராளம்; ஏராளம்.

மறுபக்கம்

குமரி மாவட்டத்தின் மண்வாசனையை நுகர தந்தபடியே அம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை செதுக்கி 2010 ஏப்ரலில் பொன்னீலனின் மறுபக்கம் நாவல் 751 பக்கங்களில் வெளிவந்தது. விலை ரூ.375. சாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான நாவலாக நெய்தல் நில மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுத்தளத்தில் பன்மைத்துவத்தை முன்வைக்கும் நாவலாக அது வெளிவந்தது. 2010 இல் ‘The Dance of Flames’ என்று ஆங்கிலத்திலும் அது மொழியாக்கம் செய்யப்பட்டு நூலாக வந்துவிட்டது.

8.10.2010

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 8.10.2010 நாள் முழுவதும் மறுபக்கம் நாவலுக்காக கருத்தரங்கமும்

நடைபெற்றது. அதில் அற்புதமான பல செய்திகளைச் சொன்னார் பொன்னீலன். அடியேனும் அந்த விழாவிற்குப் போயிருந்தேன்.

பிச்சிப்பூ

பொன்னீலனின் ஏப்ரல் 2019 இல் பிச்சிப்பூ' நாவல் 75 பக்கங்களில் வெளிவந்தது.

ஊமை கண்ட கனவு

பொன்னீலன் செய்யுள் வடிவில் 100 பக்கங்களில் எழுதிய நாவல் **ஊமை கண்ட கனவு**.

விமலை

300 பக்கங்களில் பாடல் வடிவில் பொன்னீலன் எழுதிய நாவல் **விமலை**; இவைகள் காணாமலே போய்விட்டன.

குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

டிசம்பர் 1998 இல் 260 ரூபாய் விலையில் நாகர்கோவில் காலச்சுவடு பதிப்பகம் 645 பக்கங்களில் வெளியிட்ட நாவல் குழந்தைகள் பெண்கள் ஆண்கள்.

சுந்தர ராமசாமி

தமது இலக்கியப் பணிகளுக்கு முன்னோடியாக ஏற்றுக்கொண்ட சுந்தர ராமசாமி எழுதிய அந்த நாவலுக்கு பொன்னீலன் மதிப்புரை தந்துள்ளார்.

புதிய மொட்டுகள் நாவல் அட்டைப்பக்கம். நாவலின் முகப்புப் பக்கம்

ஒரு ரூபாயிலிருந்து 1200 ரூபாய் வரை

புதிய தரிசனங்கள் நாவல் 1994 இல் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நாவல். (ஆகஸ்ட் 1992, டிசம்பர் 1995, மார்ச் 2005, டிசம்பர் 2018)

3 பாகங்களாக வெளிவந்த அதே பக்கம் அமைப்பு; புதிதாக டைப் செய்யவும் இல்லை. 2005 மார்ச்சில் வெளியான ஒரே தொகுதியில் வெளியான புதிய தரிசனங்கள் 1193 பக்கங்கள் விலை எவ்வளவு தெரியுமா? 395 ரூபாய் மட்டும் இப்போதும் அதே பதிப்புத்தான் விலை 1200 ரூபாய்.

ஒரு ரூபாய் நாவலில் இருந்து 1200 ரூபாய் நாவல் வரை தனது படைப்புக்களில் உயர்ந்து நிற்பவர் அண்ணன் பொன்னீலன்.

காலுக்குச் செருப்புமில்லை.
கால் வயிற்றுக்கூழுமில்லை.
பாழுக்கு உழைத் தோமடா - என் தோழனே
பசையற்றுப் போனோமடா

பேராற்றல் மிக்க ப.ஜீவானந்தம்

பொதுவுடமை இயக்கத்தின் போற்றப்படத் தக்க பெருந்தகையாளர் தோழர் ப.ஜீவானந்தத்தின் பாடல் வரிகளை எண்ணிப்பார்க்கிறேன். பொன்னீலன் படைப்புக்கள். பாமரருக்கும் போகவேண்டும். அதனால் பதிப்பகத்தார் விலையையும் பார்த்து வைத்திட வேண்டும். இது எளியேனது பணிவான வேண்டுகோள்.

அழகிய நாயகி அம்மாள் - கவலை

பொன்னீலனின் தாயார் அழகிய நாயகி அம்மாள் 1998 செப்டம்பரில் 432 பக்கங்களில் கவலை என்ற நாவலைத் தந்துள்ளார். விலை ரூ.150.

மணிக்கட்டிப் பொட்டல் அடப்புவிளை அம்மன் கொண்டடியார் குடும்ப வரலாறு

அந்த நாவலில் பொன்னீலனது முன்னோர்கள் பற்றி வரும் 19, 20, 21 வது அத்தியாயங்கள், 22வது அத்தியாயத்தில் பாதி ஆக மொத்தம் 32 பக்கங்களில் பாளையங்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் இலவசமாகவே வெளியிட்டுள்ளது.

பொன்னீலனின் பாரம்பரியம் பெருமையுடைத்தது. பெற்ற தாயாரும், தனது மகனைப் போலவே படைப்பாளி ஆவார்.

உழைப்பால் உயர்ந்தவர்

பொன்னீலன் தனது அயராத உழைப்பால் அகிலம் பெற்ற உயர்ந்தார். பேராசிரியர் நா.வானமாமலையின் ஆராய்ச்சி இதழில் எழுதத்துவங்கி, அவரது எழுத்துலக வளர்ச்சி படிப்படியாக மெல்ல மெல்ல உயர்ந்ததாகும்.

முதல் ஆராய்ச்சி

நா.வானமாமலையின் ஆராய்ச்சி இதழ் டபுள் டிம்மி சைஸ் 1969 ஜூலை வெளிவந்த முதல் இதழின் முகப்புப் பக்கம் இதோ.


ஆராய்ச்சி
Araichi

(காலாண்டு பத்திரிகை)

தமிழியல், சமூகவியல், மானிடவியல் பற்றிய
ஆராய்ச்சிப் பத்திரிகை.

ஆசிரியர்

அதன் பின் சிறிது காலத்தில் ஆராய்ச்சி இதழ் டிம்மி சைஸிற்கு மாறியது. இதோ அந்த முகப்புப்பக்கம்.

தென் திருவிதாங்கூர் தோள் சீலைப் போராட்டம்

1973 அக்டோபர் ஆராய்ச்சி இதழில் பொன்னீலனின் தென் திருவிதாங்கூர் தோள் சீலைப்போராட்டம் என்ற கட்டுரை வெளிவந்துள்ளது.

இந்தியச் சாதிய அமைப்பு

நாவாவின் ஆராய்ச்சியில் (மலர் 1) 1983 இல் இந்தியச் சாதிய அமைப்பு என்ற பொன்னீலனின் கட்டுரை வெளிவந்துள்ளது.

நாவாவின் ஆராய்ச்சி

காலாண்டாய்விதழ்

நிறுவக ஆசிரியர்

பேராசிரியர் நா. வானமாமலை

வீரமும் இலக்கியமும்

1988 ஜனவரி 'ஆராய்ச்சி' இதழில் (எண் 26) பொன்னீலன் எழுதிய கட்டுரை 'வீரமும் இலக்கியமும்' இதோ அதன் முகப்புப் பக்கம்



வீரமும் இலக்கியமும்

பொன்னீலன்

சமூகத்தை ஒரு மரத்துடன் ஒப்பிட்டால் யதார்த்தத்தை அந்த மரம் முழுவதும் நிரம்பி, அதன் கணுக்கள் தோறும்—குருத்துக்கள் தோறும்—குவிந்து புதிய தளிராகவும் மலராகவும் வளர்ந்து கொண்டிருக்கும்—வளர்வதற்காக விம்மிக் கொண்டு இருக்கும்—மரத்தின் உயிர்நிலை என்று குறிப்பிடலாம். இந்த உயிர்நிலையே இலையாகவும் கிளையாகவும், மலராகவும், கனியாகவும் எண்ணமுடியாத வண்ணங்களில் வெளிப்படுகின்றது. இந்த யதார்த்தம்—அதாவது உயிர்நிலை மரம் முழுவதும் ததும்பி நின்றாலும் அதை மரத்திலிருந்து—தனிப்படுத்திப் பார்க்கவோ, எடுக்கவோ முடியாது. நாளையாக மலர்ந்துவிட உருக்கொள்ளும் இந்த இன்றைய உயிர்நிலை இல்லையேல் மரம் இல்லை. முண்டும் முடிச்சும் தடித்த தோலுமான மரம் இல்லையேல் இந்த உயிர் நிலையும் இல்லை. அதாவது மரமும் அதன் உயிர்நிலையும் ஒரு இயக்கவியல் ஒருமை.

இதுபோலவே சமூக யதார்த்தமும். நேற்றைய மனிதனினுள் இன்றைய மனிதனின் உயிர்நிலை ததும்பியிருந்தது. இன்றைய மனிதனுள்ளே நாளைய மனிதனின் யதார்த்தம் பெருக்கெடுத்து நிற்கிறது. இனக்குழு சமூகத்தினுள்ளே அடிமைச் சமூகம் உருக்கொண்டது. அடிமைச்சமூகத்தின் கருப்பையில் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் உயிர்நிலை வளர்ந்தது. நிலப்பிரபுத்துவ சமூகத்தின் உயிர்நிலை முதலாளித்துவ சமூகமாகப் பரிணமிக்கிறது. முதலாளித்துவ சமூகத்தின் உயிர்நிலை சோஷலிச சமூகமாக—கம்யூனிச சமூகமாக மலருகிறது—மலரப்போகிறது.

இவ்வாறு சமூக யதார்த்தத்தின் பரிணாமமானது மனிதர்கள் வழியாகவும் மனிதனால் உருவான சமூகம் வழியாகவுமே ஏற்படுகிறது. அதாவது சமூக மனிதனின் மூலமல்லாமல் சமூக யதார்த்தம் புதிய சமூக நிலைகளாக வெளிப்படாது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக யதார்த்தம்

மார்க்சிய அழகியலின் அடிப்படைகள்

நா.வானமாமலையின் பயிற்சிப் பட்டறையில் தயாரானவர் பொன்னீலன். பேராசிரியர் நா.வானமாமலை. தலை சிறந்த மார்க்சிய ஞானபோதகர். 'மார்க்சீய தத்துவம் - இயக்கவியல் **பொருள் முதல்வாதம்' மார்க்சீய அழகியல்** *(டிசம்பர் 1978), (83 பக்கங்கள்)* **'மார்க்ஸிய சமூகவியல் கொள்கை வரலாற்றுப் பொருள் முதல்வாதம்'** *(ஏப்ரல் 1976), (120 பக்கங்கள்),* **மார்க்சீய அறிவுத் தோற்றவியல்** *(அக்டோபர் 1978), (80 பக்கங்கள்)* **ஆகிய நூல்கள்** *மார்க்சிய அறிவின் சாரத்தைத் திரட்டி நா.வானமாமலை*

தந்தது. இதனை அடியொற்றி அவரது விருப்பத்தின்படி **மார்க்சிய அழகியலின் அடிப்படைகள்** என்னும் மொழி பெயர்ப்பு நூலை பொன்னீலன் தந்தார்.

ஆவ்னர்ஸிஸ்

'ஆவ்னர்லிஸ் (Avnerzis) *(1910-1997)* சோவியத் கலை இலக்கிய தத்துவ ஆய்வாளர். ரஷ்ய எழுத்தாளர் இவர் எழுதிய Fundamentals of Marxist Aesthetics எனும் நூல் *1977* ல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்டது. அந்த நூலை *353* பக்கங்களில் தமிழாக்கம் செய்து மார்க்சிய அழகியலின் அடிப்படைகள் என்னும் நூலாக *2015* டிசம்பரில் வெளியிட்டவர் பொன்னீலன்.

செம்மலர்

செம்மலர் மாத இதழில் செம்மலர் போனதும் வந்ததும் பகுதியில் பொன்னீலன் குறித்த நறுக்குச் சுறுக்கான விமர்சனம் வந்தது.

வம்பர் கூடம்

செம்மலர் ஏப்ரல் மே ஜூன் *2020* வம்பர் கூடம் ஸ்ரீரசானந்தா எழுதியதில் பக்கம் *64*ல் கல்கி இதழில் பொன்னீலன் வெளிப்படுத்திய கம்யூனிசம் பற்றிய சொல்லாடல் விமர்சிக்கப்பட்டுள்ளது. எப்படியாயினும் அவர்கள் முன்பு எழுதிய சாதி சமய வேறுபாடுகளை மறந்து சமயப் பொறையோடு வாழவேண்டுமென்ற நல்ல விஷயம் தான் எளியேனது நினைவிற்கு வருகிறது.

சுடர்கள் ஏற்றும் சுடர்

பேராசிரியர் நா.வானமாமலைப்பற்றி சுடர்கள் ஏற்றும் சுடர் எனும் *179* பக்கங்களை கொண்ட நூலை ஜனவரி *2018* இல் வெளியிட்டவர் பொன்னீலன். அதில் பக்கம் *114* இல் 'பேராசிரியர் மணிவிழாவை ஒட்டித் **"தமிழ் ஆய்வின் புதிய எல்லைகள்". ("தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள்"** என்பதே சரியானது) எனும் தொகுப்பு நூலை ஆசிரியர் குழு வெளியிட்டது. அந்த நூலுக்குச் **சுடர்கள் ஏற்றும் சுடர்** என்ற தலைப்பில் **கவிதை நடையில் நான் ஒரு முன்னுரை எழுதியிருந்தேன் என்கிறார் அண்ணன் பொன்னீலன்.**

சுடர்களேற்றுமொரு சுடர்

தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள் பேராசிரியர் நா.வானமாமலையின் மணிவிழா மலர் நவம்பர் 1978 இல் வெளிவந்தது. அதில் அண்ணன் பொன்னீலன் எழுதிய கட்டுரை பக்கம் VIII முதல் XIV வரை வந்துள்ளது; அது கவிதை நடையில் அல்ல உரை நடையில் உள்ளது. அதன் தலைப்பு சுடர்களேற்றுமொரு சுடர் என்பதாகும்.

அய்யா வைகுண்டர்

அய்யா வைகுண்டர் 19ஆம் நூற்றாண்டில் தென் திருவிதாங்கூர் பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர் ஞானவான்.

தென்தாமரைகுளம் இராமகிருஷ்ண நாடார்

அய்யா வைகுண்டர் 'அகிலத் திரட்டை'ச் சொல்லச் சொல்ல, அய்யாவின் சீடர் தென்தாமரை குளம் இராமகிருஷ்ண நாடார் மகன் சகாதேவன் என்னும் அரிகோபாலன் எழுதினார். (1841 டிசம்பர் 12)

அ.கா.பெருமாள்

அய்யா வைகுண்டசாமி அருளிய அகிலத் திரட்டு அம்மானை அ.கா.பெருமாள் பதிப்பாசிரியராக இருந்து காலச் சுவடு வெளியீடாக டிசம்பர் 2009 இல் 591 பக்கங்களில் 350 ரூபாய் விலையில் அற்புதமாக வெளிவந்துள்ளது. அய்யா வைகுண்டவரின் அருமை பெருமைகளைப் பற்றி பொன்னீலன் பல கட்டுரைகள் தந்துள்ளார்.

வைகுண்டசுவாமியின் சமூக வாழ்வியல் கண்ணோட்டம்

பேராசிரியர் நா.வானமாமலை மணிவிழா மலரில் பொன்னீலன் வைகுண்ட சுவாமியின் சமூக வாழ்வியல் கண்ணோட்டம் என்ற கட்டுரை தந்துள்ளார் பக்கம் (151 முதல் 168 வரை)

வைகுண்டர் காட்டும் வாழ்க்கை நெறி

குமரி மாவட்டக்கலை இலக்கியப் பெருமன்ற சிறு பிரசுரமாக பொன்னீலனின் வைகுண்டர் காட்டும் வாழ்க்கை நெறி கட்டுரை வெளிவந்தது.

தே.லூர்து

நினைவில் வாழும் எனது பிரியத்திற்குரிய பேராசிரியர் தே.லூர்து அவர்கள் **நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்** நூலினை பதிப்பாசிரியராக இருந்து பாரிவேள் பதிப்பகம் மூலம் 20.9.1981 இல் 272 பக்கங்கள் 25 ரூபாய் விலையில் வெளியிட்டார்கள். அதில் பக்கம் 233 முதல் 250 வரை வைகுண்டர் காட்டிய வாழ்க்கை நெறி என்ற பொன்னீலனின் கட்டுரையை மறுபதிப்புச் செய்தார்கள்.

தெற்கிலிருந்து

சமயப் பொறைக்கும், சாதி மத வேறுபாடுகளைத் தூக்கி எறிந்திடும் தூய்மையான பண்பிற்குமுரிய பொன்னீலன் தந்த நூல் **தெற்கிலிருந்து** சமூகவியல் ஆய்வுக் கட்டுரைகளாக நவம்பர் 2001 இல் 200 பக்கங்கள் வெளிவந்தது. அதில் தான் வைகுண்டசாமி குறித்து அற்புதமான கட்டுரை வந்துள்ளது. அத்தொகுப்பில் வெளிவந்த பொன்னீலனின் தெற்கில் முதல் வெளிச்சம், கோவில் நுழைவுப் போராட்டம் சாதி தர்மமும் மனுதர்மமும், நாராயணகுரு, இந்தக் கட்டுரைகள் எளியேனை மிகவும் கவர்ந்தவை ஆகும்.

வைகுண்டசாமி

வைகுண்டசாமி என்றும் அரிய ஆய்வுக் கட்டுரையை தெற்கிலிருந்து நூலில் பக்கம் 76 முதல் 100 வரை பொன்னீலன் தந்துள்ளார்கள்.

தி.க.சி.

மதிப்பிற்குரிய தி.க.சி. அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ் தாமரை. அந்த இதழுக்கு பொன்னீலன் தனது ஊற்றில் மலர்ந்தது என்னும் கதையினை அனுப்பிவைத்தார். அதனை அப்போது தி.க.சி. கடுமையாக விமர்சித்தார் என்பார் பொன்னீலன் (என்னைச் செதுக்கியவர்கள் பக்கம் 144)

ஆனால் வரலாற்று உண்மை என்ன தெரியுமா?

ஊற்றில் மலர்ந்தது

தி.க.சி. அவர்கள் தாமரையில் பொறுப்பாசிரியராக இருந்தபோதுதான் பொன்னீலனின் ஊற்றில் மலர்ந்தது கதை தாமரையில் பிரசுரமாயிற்று.

பொன்னீலன் பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவா குறித்து நூல் எழுதும்போது "ஜீவா என்றொரு மானுடன்" என்ற தலைப்பைத் தந்தவர் தி.க.சி. தான். இதை அவர்களே என்னிடம் சொல்லியுள்ளார்கள். அதனால் தான் தி.க.சி. மறைந்தபோது தி.க.சி. என்றொரு மானுடன் என்ற தலைப்பில் அடியேன் அவர்கள் குறித்து நூல் எழுதி வெளியிட்டேன்.

அதுமட்டுமல்ல கண்ணதாசன் இதழில் "உறவுகள்" என்னும் குறுநாவல் வெளிவர பெரிதும் உதவியவர் ஐயா தி.க.சி.

ஊற்றில் மலர்ந்தது

பொன்னீலன் எழுதி தாமரை 'இதழில்' வெளிவந்த கதை 'ஊற்றில் மலர்ந்தது' **திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.**' கண்ணதாசனின் 'உறவுகள் வந்தது.

"ஊற்றில் மலர்ந்து குறுநாவலை வாசித்துவிட்டு கண்ணதாசன் இதழ் நிர்வாகத்தினர் தங்களுக்கும் ஒரு குறுநாவல் வேண்டும் என்று தி.க.சி. மூலமாக என்னை வேண்டிக்கொள்ள, உறவுகள் குறுநாவலை எழுதி அனுப்பினேன். (என்னைச் செதுக்கியவர்கள் - பொன்னீலன் தன் வரலாறு 2019, பக்கம் 147 என்று பொன்னீலனே கூறியுள்ளார்.

இடம் மாறி வந்த வேர்கள்

பொன்னீலனின் ஊற்றில் மலர்ந்தது சிறுகதைத் தொகுதியில் முதலாவது கதை இடம் மாறிவந்த வேர்கள். மேற் சொன்ன மூன்று கதைகளையும் சேர்த்து நான்கு சிறுகதைகள் 1989 பிப்ரவரியில் ஊற்றில் மலர்ந்தது எனும் தனி நூலாக வெளிவந்தது.

காமம் செப்பாது

டிசம்பர் 1996 இல் வெளிவந்த பொன்னீலனின் சிறுகதைத் தொகுதி காமம் செப்பாது. 15 சிறுகதைகள் விலை ரூ.30 பக்கங்கள் 156.

நித்தியமானது

ஆகஸ்ட் 1998 இல் வெளிவந்த பொன்னீலனின் சிறுகதைத் தொகுதி நித்தியமானது. 14 சிறுகதைகள் 128 பக்கங்கள் விலை ரூ.27.

அன்புள்ள

சமகால சிறுகதைத் தொகுப்பு நூல் '**அன்புள்ள**' செப்டம்பர் 2000 இல் பொன்னீலனை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

இந்தச் சிறுகதைகளுக்காக அடியேன் அய்யா பொன்னீலனைப் போற்றவில்லை. பிறகு எதற்காக? அவரது தூய உள்ளம்; சாதி சமயங்களைக் கடந்த உணர்வு அதற்காக அவர்களைப் போற்றுகிறேன்.

ரோமிலா தாபர் - கே.என்.பணிக்கர்

சர்வபள்ளிகோபால் முதல் ரோமிலா தாப்பர், கே.என். பணிக்கர், ஹிமான்சுராய் உள்ளிட்ட 25 பெருமக்கள் கையொப்பமிட்ட ஆங்கிலத்தில் வெளியான அறிக்கை தமிழில் வெளிவந்தது.

சாதி மதம் பாரோம்

'பாபர் மசூதி ராமஜென்மபூமி பிரச்சினை அரசியல் திசை திருப்பலுக்கு உள்ளாகும் வரலாறு' என்னும் சிறுபிரசுரமமாக இந்திய சமூக விஞ்ஞான கழகம் சென்னை, டிசம்பர் 1989 இல் வெளியிட்டது.

பப்ரிமஜீத் - இராமஜன்மபூதி வரலாறும் வக்கிரங்களும்

புதுடில்லி நேரு பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர்கள் அதே ஆய்வு அறிக்கையை இரா.இந்திரா தேவி தமிழில் மொழி பெயர்த்து நாவாவின் ஆராய்ச்சி சிறு நூல் வெளியீடு வரிசை எண். 1 ஆக இரண்டு ரூபாய் விலையில் பிப்ரவரி 1990 இல் வெளியிட்டனர்.

ஜாதி மதங்களைப்பாரோம்

அச்சிறுபிரசுரத்திற்கு, பொன்னீலன் (பொதுச்செயலாளர் தமிழ்நாடு கலை இலக்கியப் 'பெருமன்றம்) 13 பக்கங்களில் எழுதிய, முன்னுரை ஜாதி மதங்களைப் பாரோம்' மனித நேயமுள்ளவர்களை ஓரணியில் திரட்டும் அருமையான கட்டுரை அது.

பொன்னீலன் கவிதைகள்

செந்தமிழ் வழங்கிய சேர நாட்டுப் பகுதியில் (இன்றைய தமிழகம்) வாழ்ந்துவரும் பொன்னீலன் (ஸ்ரீ கண்டேஸ்வர பக்தவச்சலன்) கவிதைகள் பல தீட்டியுள்ளார். அது **பொன்னீலன் கவிதைகள்**' எனும் நூலாக வெளிவந்திருக்கிறது. '**புல்லின் குழந்தைகள்**' எனும் கவிதை நூலும் வெளிவந்துள்ளது.

ஆர்.எஸ்.சர்மா

1990 பிப்ரவரி 10 இல் வாரங்கல் சுகாதியா பல்கலைக்கழகத்தில் ஆந்திரப் பிரதேச வரலாற்றுக் காங்கிரசில் **வகுப்புவாதமும் இந்தியாவின் பழமையும்** என்ற தலைப்பில் பேராசிரியர் ஆர்.எஸ். சர்மா உரையாற்றினார். அது பின்னால் நூலானது.

வகுப்பு வாத வரலாறும் இராமரின் அயோத்தியும்

ஆர்.எஸ்.சர்மாவின் ஆங்கில நூலை வகுப்பு வாத வரலாறும் இராமரின் அயோத்தியும் எனும் நூலாக டிசம்பர் 1990 இல் அதனை மொழி பெயர்த்தது பொன்னீலன் 47 பக்கங்களில் வெளியான அதன் விலை ரூ.நான்கு.

வாழ்க்கைப்பாதை - ஏ.எஸ்.மரேங்கோ

ஒரு கல்விக்காவியம் இரண்டு பாகங்களாக, ஏ.எஸ். மகரங்கோவின் வாழ்க்கைப்பாதை ஆங்கில நூலை தமிழில் ஜூலை 1976இல் மொழி பெயர்ப்புச் செய்தவர் பொன்னீலன்.

ஃபெவிக்ஸ் குட்நெட்ஸோவ்

ஃபெவிக் குட்நெட் ஸோவின் இன்றைய சோவியத் இலக்கியத்தில் மனித மதிப்புகள் என்ற ஆங்கில நூலை இணைமொழி பெயர்ப்பாளர் எஸ்.கே.கங்காவுடன் இணைந்து, மொழி பெயர்த்து டிசம்பர் 1985 இல் வெளியிட்டவர் பொன்னீலன்.

NGBH

நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பொன்னீலன் பெரும்பாலான நூல்களை வெளியிட்ட பெருமையைத் தட்டிச்செல்கிறது.

தற்காலத் தமிழ் இலக்கியமும் திராவிட இயக்கச் சித்தாந்தங்களும்

1986 மார்ச்சில் (இரண்டாம் பதிப்பு சூன் 1988 பக்கங்கள் 51 விலை ரூ.5) பொன்னீலன் எழுதிய நூல் தற்காலத் தமிழ் இலக்கியமும் திராவிட இயக்கச் சித்தாந்தங்களும்

சி.மகேந்திரன்

சூலை 2001 தாமரை பொன்னீலனது அட்டைப்படத்துடன் வெளியானது. (அவரது முதற்கதை பிரசுரமானது அதில் தான்; 'தோழமைக்கு மணிவிழா என்ற கட்டுரையை பொன்னீலனைப் பற்றி சி.மகேந்திரன் எழுதியிருந்தார் (பக். 2 – 5).

அண்ணாச்சி பொன்னீலன்

டாக்டர் ஆரூ இளங்கோவன் அதே இதழில் பக்கம் 44 இல் அண்ணாச்சி பொன்னீலன் என்ற கவிதை தந்துள்ளார். தாய் மொழி வழிக்கல்வி தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் 2000 மார்ச்சில் பொன்னீலன் எழுதி வெளியிட்ட பிரசுரம் தாய்மொழி வழிக்கல்வி.

முற்போக்கு இலக்கிய இயக்கங்கள்

தொ.மு.சி. ரகுநாதனோடு இணைந்து பொன்னீலன் எழுதிய நூல் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் இது 1994 செப்டம்பரில் வெளிவந்தது. (104 பக்கங்கள் 15 ரூபாய்)

குமரி ஆதவன்

பேரறிஞர்களுடன் எனும் நூலினை குமரி ஆதவன் குமரி மாவட்டப் பொன்விழா வெளியீடாக 2008 நவம்பரில் வெளியிட்டார். அதில் பக்கம் 8 முதல் 20 வரை பொன்னீலனது அற்புதமான பேட்டி. 'நாட்டின் சுயாதிபத்தியத்திற்கு ஆபத்து' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

புதிய புத்தகம் பேசுது

அக்டோபர் 2008 'புதிய புத்தகம் பேசுது' இதழ் பொன்னீலனின் அட்டைப் படத்துடன் வெளிவந்தது. எழுத்தாளர்கள் படைப்பில் தம்மைப் பற்றியே எழுதிக் கொள்கிறார்கள். இது பொன்னீலனது பேட்டியின் தலைப்பு

தி இந்து நூல்வெளி

தி இந்து நூல்வெளி, அக்டோபர் 14, 2017 இல் பொன்னீலனின் உலகம் என்வீடு என்ற கட்டுரையும், அதைத் தொடர்ந்து அடுத்த வாரமே 21.10.2017 நூல் வெளியில் பொன்னீலனின் உலகம் என் நண்பர்கள் கட்டுரையும் பிரசுரமாயிருந்தது. இப்போது கொரோனா ஊரடங்கின்போது சுதந்திரத்துக்கு முன்பிருந்த சூழலுக்குள் ஊரடங்கு கூட்டிப் போய்விட்டது

என்ற பொன்னீலனின் பேட்டி இந்து தமிழ்திசை 15.5.2020 இல் வெளிவந்தது. தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர்.

தொ.மு.சி. ரகுநாதன்

2002 மே '**தொ.மு.சி. ரகுநாதன் வாழ்வும் பணியும்**', 312 பக்கங்கள் விலை ரூ.90, 2003 டிசம்பரில் '**தொ.மு.சி. ரகுநாதன் இலக்கியத்தடம்**', 265 பக்கங்கள் விலை ரூ.125, நவம்பர் 2004 இல் '**எங்கள் ரகுநாதன்** 152 பக்கங்கள் விலை ரூ.50. '**தொ.மு.சி.ரகுநாதன்**' (ரகுநாதன் என்னும் இலக்கிய ஆளுமை 2013 (168 பக்கங்கள் விலை ரூபாய் 50) ஆகிய நான்கு நூல்களை தொ.மு.சி. ரகுநாதனுக்காகத் தந்தவர் பொன்னீலன்.

ஜீவா என்றொரு மானுடன்

ஆகஸ்ட் 1982 ஜீவா பவளவிழா பிறந்த நாள் வெளியீடு பொன்னீலன் எழுதிய **ஜீவா என்றொரு மானுடன்** 405 பக்கங்கள் விலை ரூபாய் 18.

ஜீவாவின் சிந்தனைகள்

ஜூலை 1998 இல் வெளிவந்த நூல் **ஜீவாவின் சிந்தனைகள்** (இரண்டாம் பதிப்பு சூன் 2000. 154 பக்கங்கள் விலை ரூபாய் 41).

ஜீவாவின் பன்முகம்

சூலை 2007 இல் பொன்னீலன் ஜீவா குறித்து தந்த நூல் **ஜீவாவின் பன்முகம்** 357 பக்கங்கள் விலை ரூ.150)

ப.ஜீவானந்தம் நூல் திரட்டு

291 பக்கங்கள் விலை ரூ.130 ப.ஜீவானந்தம் நூல் திரட்டு பொன்னீலனால் 2007 இல் வெளியிடப்பட்டது. சாகித்திய அகாதெமியின் இந்த நூல் 2011 இல் மறுபதிப்பானது.

பொதுவுடமையின் பொக்கிஷமான ப.ஜீவானந்தம் குறித்து நான்கு நூல்களைத் தந்தவர் பொன்னீலன்.

ஒரு ஜீவநதி

ப.ஜீவானந்தம் உருவப்படத்துடன் பொன்னீலன் எழுதி வெளிவந்த நூல் ஒரு ஜீவநதி தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40 ஆண்டு கால வரலாறு சூன் 2003 இல் வந்தது. 360 பக்கங்கள் விலை ரூ.நூறு.

தென் குமரி வட்டார வழக்குகள்

மார்ச் 2013 இல் 310 பக்கங்களில் 220 ரூபாய் விலையில் பொன்னீலன் எழுதிய நூல் தென்குமரி வட்டார வழக்குகள்.

ஓர் அன்னப்பறவை

மருதன் வாழ்வு அ.க.அன்னச்சாமி வாழ்க்கையினை ஓர் அன்னப்பறவை எனும் நூலினை (160 பக்கங்களில் விலை ரூ.60) டிசம்பர் 2005 இல் எழுதியவர் பொன்னீலன்.

தியாகி ஆர்.வேலுச்சாமித்தேவரின் வாழ்க்கை வரலாறு

164 பக்கங்களில் 120 ரூபாய் விலையில் ஆகஸ்ட் 2014 இல் பொன்னீலன் எழுதிய நூல். ஆர்.வேலுச்சாமித் தேவரின் வாழ்க்கை வரலாறு.

அத்தாணி மக்கள்

இந்து – முஸ்லிம் ஒற்றுமை உணர்வை நிலைநாட்டும் செய்திகளைச் சொல்லிடும் அத்தாணி கதைகள், அத்தாணி மக்கள் (சூன் 2005 விலை ரூ.45 பக்கங்கள் 136) பொன்னீலன் தந்தார்.

தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி எனும் அற்புத சமய நல்லிணக்க நூலாக 220 பக்கங்களில் டிசம்பர் 1991 இல் தந்தவர் பொன்னீலன் (தமிழினத்தின் தன்னேரில்லாப் போராளி பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் நினைவுக்கு இந்நூல் சமர்ப்பணம் என்று அதில் பொன்னீலன் குறிப்பிட்டது என் உள்ளத்தில் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அவரைக் குறித்து எழுதவேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

என்னைச் செதுக்கியவர்கள்

தன் வரலாறாக என்னைச் செதுக்கியவர்கள் என்ற அற்புதமான நூலை பொன்னீலன் அவர்களே 695 பக்கங்களில் தந்த பிறகு அவர்கள் குறித்து நான் புதிதாக எதை எழுதிட?

பொங்கல் வாழ்த்து

ஆண்டுதோறும் அடியேனை மறக்காது அவர்கள் பொங்கல் வாழ்த்தினை அனுப்பி வைப்பார்கள். அதில் காணாமல் போனவை இருக்கக்கூடும். அடியேனிடம் உள்ளதை அப்படியே தருகிறேன்.

பொன்னீலனின் பொங்கல் வாழ்த்துக்கள்

Philately: King Of Hobbies
COLLECT INDIA POSTAGE STAMPS
CONTACT Nearest Philatelic Bureau

50 भारत INDIA

पोस्ट कार्ड POST CARD

प्र.मु./ S.P.P. HYD. 2006

செ. திவான் அவர்கள்,
சுஹைனா பதிப்பகம்,
106 எப்,
4 வ திருவனந்தபுரம் சாலை,
பாளையங் கோட்டை

पिन PIN 627002

(इस लाइन के नीचे न तो लिखें और न ही मुद्रित करें Do not write or print below this line)



பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்

☆ அன்பான
பொங்கல்
நல்வாழ்த்துக்கள் ☆


POST CARD

Philately: King Of Hobbies

COLLECT INDIA POSTAGE STAMPS

CONTACT

Nearest Philatelic Bureau

INDIA 50

செ. திவான்

சைவா பதிப்பகம்

106/4A திருவனந்தபுரம்

ரோடு, பாளையங்கோட்டை

पिन PIN 627002

(इस लाइन के नीचे न तो लिखें और न ही मुद्रित करें Do not write or print below this line)

பொன்னீலன்

6/60, மணிகட்டிப்பொட்டல்

ஈத்தாமொழி–629 501

நாகர்கோவில்


மணிகட்டிப்பொட்டல்

தை 1

புத்தாண்டும் புதுப் பொங்கலுமாய்ப்

புதுவாழ்வு.

புதுமையாய் இனிமையாய்ப்

பொங்கட்டும்.



POST CARD पोस्ट कार्ड

प्र.प्र./SPP/HYD - 2013

செ. திவான்
சுஹைனா பதிப்பகம்
106 எப், 4 எ திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை

पिन PIN 6 2 7 0 0 2

(इस लाइन के नीचे न तो लिखें और न ही मुद्रित करें Do not write or print below this line)



பொன்னீலன்
[illegible]-57 மணிகட்டிப்பொட்டல்
சந்தாமொழி
அ.கு.எண் - 629 501
கன்னியாகுமரி மாவட்டம்

புத்தாண்டும் புதுப் பொங்கலும்
வாழ்வில்
நலன்களெல்லாம் கொணர்க.
இருள் விலகுக, ஒளி பரவுக.

அன்புடன்,


POST CARD

செ. திவான்,
சுஹைனா பதிப்பகம்,
106 7, 4B, திருவனந்தபுரம்
சாலை, பாளையங்கோட்டை.

पिन PIN 627002

(इस लाइन के नीचे न तो लिखें और न ही मुद्रित करें Do not write or print below this line)

பொன்னீலன்
6/60, மணிகட்டிப்பொட்டல்
ஈத்தாமொழி–629 501
நாகர்கோவில்


மணிகட்டிப் பொட்டல்
தை 1.

புத்தாண்டும் புதுப்பொங்கலுமாய்ப்
புதுவாழ்வு.
புதுமையாய் இனிமையாய்ப்
பொங்கட்டும்.



பொன்னீலன்
6/60, மணிகட்டிப்பொட்டல்
ஈத்தாமொழி—629 501
நாகர்கோவில்

புத்தாண்டும் புதுப் பொங்கலும் போல்
எங்கும்
புதிய இனிமைகள் பொங்குக.

புத்தாண்டும் புதுப்பொங்கலும்

நல்லவை எல்லாம் கொணர்க.

பொன்னீலன்
6/60, மணிகட்டிப்பொட்டல்
ஈத்தாமொழி–629 501
நாகர்கோவில்

புத்தாண்டு
பொங்கல் வாழ்த்துக்கள்

PONNEELAN
15/33, MONIKETTIPOTTAL
EATHAMOLY - 629 501
KANYAKUMARI
04652 - 250328

தை-1. 2046.

இனிய புத்தாண்டுப்
பொங்கல் நல் வாழ்த்துக்கள்.
இயற்கையை வஞ்சிக்காத
இனிய வாழ்வு பழகுவோம்.
அன்பும், அறிவும், சமத்துவ
உணர்வும் எங்கணும் விளங்குக.

பொன்னீலன்
6/60, மணிகட்டிப்பொட்
ஈத்தாமொழி–629 501
நாகர்கோவில்

புத்தாண்டும் புதுப் பொங்கலும் போல்
எங்கும்
புதிய இனிமைகள் பொங்குக.

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஒளிபரவுக - நமை மருட்டும்
இருள் விலகுக
வாழ்வு பொங்குக - இனிய
புத்தாண்டு எழுக

அன்புடன்.

தை - 1. 2043

இனிய
புத்தாண்டுப்
பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்.

மணிக்கட்டிப் பொட்டல்,
தை-1-2047

மழை பொழிக மண் செழித்திடுக
மக்கள் வாழ்வில் நெருக்கடிகள் விலகிடுக
புத்தாண்டும் புதுப் பொங்கலும் போல
இனிமையும் புதுமையும் எங்கும் பொங்கிடுக.

எளியேனுக்கு எழுதிய கடிதங்கள்



POST CARD

செ. திவான் எம்.ஏ.எம்.பில்
இறையரா பதிப்பகம்
106 எப், 4 எ திருவனந்தபுரம் சாலை
பின் PIN 627002
பாளையங்கோட்டை.



பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்.
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்.

19.02.02

அன்பு தோழர் சகோதரர்
திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய அலிப் புலவர், வ.உ.சி.யும் திருக்குறளும் ஆகிய நூல்கள் இரண்டு இரண்டு படிகள் கிடைத்தன. கட்டுரையும் கிடைத்தது. மிக்க நன்றி.

'தெற்கிலிருந்து' நூல் இன்னும் வெளிவரவில்லை. இன்னும் ஒரு வாரத்தில் வந்து விடும் என்று நம்புகிறேன். நூல் என் கையில் கிடைத்ததும் முதல் படியை தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.


POST CARD
INDIA
PIN 627002


17.09.02

பொன்னீலன்,
6/11/02 மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்

அன்பு மிக்க தோழர் அவர்களுக்கு
வணக்கம். தாங்கள்
அன்புடன் அனுப்பி வைத்த
இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.
என்னும் நூல் இரண்டு பிரதிகள்
கிடைத்தன. மிக்க நன்றி.

இந்நூலை மிகச் சிறந்த
ஒரு சாதனை. அதை வ.உ.சி.
உலகுக்கு விளக்கித் தந்திருப்பது
அவருடைய அரிய ஈடுபாட்டைக்
காட்டுகிறது. நீங்கள் அதை பதிப்-
பித்திருப்பதோடு நூலின் வரலாற்றை-
யும் தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள்.
மீண்டும் மனமார்ந்துப் பாராட்டுகிறேன்

தங்கள் கட்டுரையை
தாமரைக்கு அனுப்புகிறேன். தொகுப்பு
பணியை மகேந்திரன் முடித்து விட்டாரா
என்பது தெரியவில்லை. முடிக்காவிட்டால்





பொன்னீலன்

மணிக்கட்டிப்பொட்டல்- 629 50
கன்னியாகுமரி மாவட்டம்.
போன்: 04652-350328.
நாள் 22.01.2002.

பொருள்: ரகுநாதன் இலக்கியத் தடம் –
ரகுநாதன் பற்றிய கட்டுரைகள் – தொகுப்புத்திட்டம்.

***

பேரன்புடையீர்,

வணக்கம். அண்மையில் மறைந்த இலக்கிய மேதை தொ.மு.சி. ரகுநாதன் அவர்களின் இலக்கியப் படைப்புகள், விமர்சனங்கள், ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள், இதழியல் பணிகள்/மற்றும் அமைப்பு சார்ந்த சாதனைகளை ஒரு நூலாகத் தொகுத்துச் சிறந்த முறையில் வெளியிட "காவ்யா" நூல் வெளியீட்டகம் சார்பாக காவ்யா சண்முகசுந்தரம் அவர்கள் விரும்பி, நூல் தொகுக்கும் பணியினை என்னிடம் ஒப்படைத்துள்ளார். நூலை இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வெளியிட விருப்பம்.

அந்த நூலில் தங்கள் கட்டுரையும் இடம் பெற வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம். ஆகவே தாங்கள் தயவு செய்து கீழ்க்கண்ட தலைப்பில் ஒரு கட்டுரை அனுப்பித் தரும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

பொருள்:

கட்டுரையை இந்த ஆண்டு பிப்ரவரி இறுதிக்குள் எங்களுக்கு அனுப்பித் தரும்படி வேண்டுகிறோம். தங்கள் ஒப்புதலை இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அஞ்சல் அட்டையின்மூலம் தெரிவிக்கும்படியும் அன்போடு வேண்டுகிறோம்.

அன்புடன்,

Ponneelan

Monikettipottal - 629 501,
Kanyakumari Dt.,
Tamil Nadu.
✆ : 04652-350328.

பெறுநர்

செ. திவான் அவர்கள்,

Date 10.09.03

நாயகம்,
மறுமலர்ச்சி தி.மு.க. தலைமை அலுவலகம்,
சென்னை - 8.

பேரன்புடையீர்,

வணக்கம். "தியாக நெருப்பில் வைகோ" நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ் கிடைத்தது. தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காகவும், மலர்ச்சிக்காகவும் தமிழ்நாட்டின் முழுமையான விடுதலைக்காகவும் தொடர்ந்து பாடு பட்டு வரும் தோழர்களில் முக்கியமான ஒருவர் வைகோ. அக்கிரமச் சட்டத்தின் பிடியில் அகப்பட்டு, அநியாயமாகச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அந்தத் தமிழ் மகனின் விடுதலைக்காகத் தமிழகமே ஒன்று திரண்டு போராட வேண்டியத் தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது. உங்கள் நூல் வெளியீட்டை அந்தப் போராட்டப் பெரு நெருப்பின் வெப்ப மிக்க ஒரு கூறாகவே நான் மதிப்பிடுகிறேன். கட்டபொம்மன், மாவீரன் திப்பு சுல்தான், சுதந்திரப் பெரு நெருப்பு வ.உ.சி. போன்ற மாபெரும் மனிதர்களின் வீர வரலாறுகளைத் தமிழகத்துக்குத் திரட்டித் தந்த நீங்கள், இன்றைய சமகால நாயகர்களில் ஒருவரான வைகோ அவர்களின் வரலாற்றையும் எழுதி வெளியிடுவது காலப் பொருத்தமானதே. தங்கள்

முயற்சி விடுதலையை விரும்பி வருபவர்க்கும் தமிழ் மக்களால் போற்றப்படும். நூலின் வெளியீட்டு விழாவையும் அருமையாக அமைத்திருக்கிறீர்கள். வைகோ அவர்களை நிமித்தமாக வைத்து தென்னக உழைக்கும் மக்களின் விடுதலைக்கான வாய்ப்புகளைப் பிரகடனம் செய்யும் விழாவாக இது அமையும் என்று நம்புகிறேன். விழா சிறந்திடுக. தங்கள் முயற்சிகள் மேலும் மேலும் வளர்ந்திடுக.

அன்புடன்

பொன்னீலன்

11-09-03.

பொன்னீலன்

15/33, மணிகட்டிப் பொட்டல் (அஞ்.)
கன்னியாகுமரி மாவட்டம் – 629 501.
பேச : 04652-250328.
9443791644.

பெறுநர்

உயர்திரு.
ஜெ. திவான் அவர்கள்

பேரன்புடையீர்,

வணக்கம். புகழ் மிக்க தமிழ் கவிஞரும் பண்பாட்டு விமர்சகருமான ஹெச்.ஜிரசூல் அவர்களுக்கு நேர்ந்த துயரத்தைப் பற்றி தாங்கள் அறிந்திருப்பீர்கள். சில மாதங்களுக்கு முன்னால் நாகர்கோவில்


POST CARD
24 MAY 2004
செ. திவான் அவர்கள்
அசோசியேட் பதிப்பகம்
16F. கே.ஏ. திருவனந்தபுரம்
ரோடு.
பாளையங்கோட்டை
पिन PIN 627002
Do not write or paste below this line


பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்
19/05/04.
அன்புள்ள சகோதரர்
அவர்கட்கு.
27.05.04 அன்று
10. மணிக்கே M.H.
ஹால் வந்து சேர்கிறேன்
பேசி மகிழ்வோம்
நன்றியுடன்
அன்பு
பொன்னீலன்



பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்

13/10/04

அன்பு மிக்கச் சகோதரர் அவர்களுக்கு

வணக்கம். தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது மிக்க நன்றி. ஜீவாவின் கை எழுத்து பிரதிகளைத் தொகுத்து ஜீவாவின் சிந்தனை என்னும் பெயரில் ஒரு நூல் என்.சி.பி.ஹெச் வெளியிட்டிருக்கிறது. சென்னை செல்லும் போது தங்களுக்கு வாங்கி அனுப்புகிறேன்.

அன்புடன்.

பொன்னீலன்

அன்பு மிக்க சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் அனுப்பி வைத்த கட்டுரைத் தொகுப்பு கிடைத்தது. ஒரு பகுதி தான் இன்று படித்தேன். கோபுரங்களில் ஏறி தற்கொலை செய்து கொள்ளும் முயற்சியின் உண்மைக் காரணத்தை தெளிவாக சொல்லியிருக்கிறீர்கள். சுஜாதா அவர்களுக்கு நல்ல பதில். சுஜாதா. அவர்களின் பலவீனங்களையும் வலுவாக பதிவு செய்திருக்கிறீர்கள். தற்கொலை சமயத்திலும் [illegible] உலகம் முழுவதும் கட்டமைக்கப் படும் ஒரு மிகப் பெரியப் பொய்க்கு சுஜாதாவும் தன் பங்கை செய்திருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. தனி மனித பலவீனங்களையும் குறுங்குழுக்களின் பலவீனங்களையும் அவர்கள் பிறந்த சமூகத்தின் பலவீனங்களாக சித்தரிக்கும் கொடூர வழக்கம் மிக நீண்ட காலமாகவே இங்கு நிலவி வருகிறது. உங்கள் பதில்கள் பொய்மையைக் கீறி உண்மையை வெளிபடுத்துபவை. வளர்க உங்கள் பணி.

அன்புடன்.

பின்குறிப்பு

எங்கள் ரகுநாதன் நூல் பிரதி விரைவில் அனுப்புகிறேன்.

2/8/06

பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்.

அன்பு மிக்க சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். 'வேலூர் புரட்சியில் வீரமிகு முஸ்லீம்கள்' நூல் கிடைத்தது. எண்ணங்கள் என்ற பெயரில் உங்கள் உணர்வுகளைப் பதிவு செய்திருக்கிறீர்கள். செறிவும், தெளிவும், அழகும் நிறைந்த வரிகள் என்னைக் கிறங்க வைக்கின்றன. பக்கம் 9, பத்தி 2 கண்கலங்காமல் படிக்க முடியவில்லை "...வார்த்தையாக கூட இடம் பெறாமல் வஞ்சிக்கப்பட்டோம்" மனதை ஊடுருவிச் செல்லும் ஆழமான வார்த்தைகள். நூலை முழுக்கப் புரட்டினேன். பயனுள்ள பின்னிணைப்பு. வரைதரவியின் பட்டம் - அதன் கம்பீரம் - என்னை மயங்க வைக்கிறது. சிறு சிறு தலைப்புகளில் தோட்டாக்களைப் போல பத்திகள் மனதை தாக்குகின்றன. படித்துவிட்டு விரிவாக எழுதுகிறேன்.

பொன்னீலன்

சாகித்ய அகாதமி
விருது பெற்ற எழுத்தாளர்
உறுப்பினர்:
மத்திய திரைப்படச் சான்றிதழ்க் குழு

I5/33, மணிகட்டிப் பொட்டல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 501.
பேச : 04652–250328.
9443791644.

14.6.07

அன்பு மிக்க சகோதரர் செ. திவான் அவர்களுக்கு,

வணக்கம். "இந்திய சுதந்திரப் பெரும் போரில் இஸ்லாமியர்கள்" என்னும் திருப்பெயரில் தாங்கள் திரட்டியுள்ள வரலாற்றுக் களஞ்சியம் இதோ என் கையில். நூலின் அமைப்பைப் பார்த்ததுமே பிரமிப்பு. உள்ளே உள்ள செய்திகள், படங்கள். அதிலும் குறிப்பாக முகலாய மன்னரிடம் வணக்கம் செய்ய அனுமதி கேட்டு ஆங்கிலேயன் வந்து நிற்கும் கோலம். இந்து முஸ்லிம் ஒற்றுமை வரலாற்றைத் தங்களுடைய ஆதிக்க வெறிக்காக எவ்வளவு தூரம் உடைத்துச் சிதைத்து நஞ்சைப் புகுத்தி நாசமாக்கி விட்டார்கள் ஆங்கிலேய அறிவாளிகள். அந்த நஞ்சு இந்துத்துவ வெறி என்னும் அசுர வடிவம் பெற்று, இந்தியாவில் இன்று என்னென்ன ஆட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறது... என் சிந்தனை இப்படியெல்லாம் கட்டறுந்து பாய்கிறது.

ஆதிக்கவாதிகள் ஏற்படுத்தி வரும் இந்தப் பிளவுகளை ஒற்றுமைப் படுத்தி, இந்திய மக்களை சகோதர உணர்வோடு வாழச் செய்வதில் தங்கள் நூல் பெரும் பணியாற்றும்.

நான் சில நெருக்கடியான வேளைகளில் மாட்டியிருப்பதால் இரண்டு மாதம் கழித்துத் தான் இந்த நூலைப் படிக்கத் தொடங்குவேன். ஆயினும் தினமும் கொஞ்சம் புரட்டிப் பார்ப்பதற்காக மேஜையிலேயே வைத்திருக்கிறேன். தங்கள் பணி பிரம்மாண்டமானது. தமிழ் மக்களை ஒற்றுமைப் படுத்த பெரும் படையாக அமையப் போவது. பாராட்டுக்கள்.

அன்புடன்.

அன்பு சகோதரர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். சங்கொலி பற்றிய தங்கள் செய்தித் தொகுப்பு கிடைத்தது. இவ்வளவு விபரங்களா என்ற வியப்பும், அதை எப்படித் தேடித் தொகுத்தீர்கள் என்ற மலைப்பும் ஏற்படுகின்றன. ஒரு போர்க் கருவியாக, போர்க் களத்து வாழ்த்தலிக் கருவியாக, மக்களுக்கு நம்பிக்கையூட்டும் இறைக் கருவியாக, அழகுப் பொருளாக எப்படி எப்படியெல்லாம் அது பயன் படுகிறது என்ற ஒரு பார்வை. இந்தச் சங்கொலி இலக்கியங்களில், குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் அதன் பின் வரும் இலக்கியங்களில் எவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது என்பது இன்னொரு பார்வை. இந்தச் சங்கொலி மங்கல அணியாக மக்களால் எப்படி உகக்கப் படுகிறது என்பது இன்னொரு பார்வை. தமிழ் மக்களின் வாழ்வின் சடங்குக ளோடு அது எப்படிப் பின்னிப் பிணைந்திருக்கிறது என்பது இன் -னொரு பார்வை... இப்படி எத்தனை எத்தனை பார்வைகளில் அதைத் திரட்டியிருக்கிறீர்கள். இவை மட்டுமா, தெண்ணீர் அருந்துவதற்காக, தொழிலாளரை உழைப்புக்கு அழைப்பதற் காக சங்கொலி எப்படி பயன்படுகிறது என்பதையும் மறக்காமல் சொல்லியிருக்கிறீர்கள். அரிய தகவல் திரட்டு.

பிறந்த குழந்தைக்குச் சேனை ஊற்ற, பால்வார்க்க, மருந்து ஊற்றவும் கூட சங்கு பயன்படுகிறது. நாட்டுப் புறப் பாடல்களில் இந்த வகைச் சங்கு அழகாகப் பதிவாகி -யிருக்கிறது. இரண்டாவது பதிப்புப் போடும் போது இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

வைகோ அவர்கள் கொடுத்து வைத்தவர். உங்களைப் போன்ற பேரறிஞர்கள் அவரைச் சுற்றி அமர்ந்திருப்பது எவ்வளவு அபூர்வமான காரியம்.

உங்கள் வரலாற்றுப் பணிகள் தொடரட்டும்.

அன்புடன்,

பொன்னீலன்


19/9/07

பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்.

அன்புள்ள சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். பம்பரம், இந்து முஸ்லிம் ஒற்றுமை இரண்டு நூல்களும் கிடைத்தன. சிறிய நூல்கள். அரிய செய்திகள். பம்பரம் பற்றி இவ்வளவு தகவல்களா? எப்படி உங்களால் திரட்ட முடிகிறது. படித்துக் கொண்டே இருக்கையில் எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. பக்கம்-16 சுழலும் பம்பரம் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதற்கு அடுத்தக் கட்டமாக ஒரு விளையாட்டு, பம்பரத்தைக் கயிற்றால் சுழற்றி தரையில் விழாமல் கையில் வாங்க வேண்டும். அதில் தோற்றுப் போகிறவர்கள் பம்பரத்தை வட்டத்துக்குள் வைக்க வேண்டும். இது கைப் பம்பரம்.

பக் - 24, முதல் வரி - வல்லான் வகுத்ததே வாய்க்கால் - எங்கள் பக்கங்களில் வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பார்கள். அதே போல வல்லவன் பம்பரம் என்பார்கள் எங்கள் பகுதியில்.

பக் - 3, வ.உ.சி என் மனமும் என் உடம்பும் எனக் கருதுகிறேன். ஊன் என்று பதிவாகியிருக்கிறது.

இந்து முஸ்லீம் ஒற்றுமை திருமூலருக்கும், திருக்குறளுக்கும் மறைகு காஞ்சிப் பெரியப்பதே காலப் பொருத்தம்....

அன்புடன்

POST CARD

உரிமையாளர்
செ. திவான் அவர்கள்,
சுஹைனா பதிப்பகம்,
106 F, 4A - திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை

PIN 627002

Do not write or print below this line

பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்
629 501.
கன்னியாகுமரி மாவட்டம்

10 09 98

அன்புமிக்க சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம், நீங்கள் அன்போடு அனுப்பி வைத்த கீழ்கண்ட நூல்கள் கிடைத்தன.

1. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சியின் அழகும், ஆரோக்கியமும்
2. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சியின் சிவஞான போத உரை.
3. அறிஞர் அண்ணாவின் அமுத மொழிகள் 100
4. கழகத்தின் காவலன் கே.வி.கே.சாமி
5. சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசு
6. சுயமரியாதைச் சுடர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி.

நூல்களை வரலாற்றுக் கடல் என்று தான் சொல்ல வேண்டும். அதிலும் எல்லைகளை சாதி என்றோ, மதம் என்றோ, அரசியல் என்றோ, குறுக்கிக் கொள்ளாமல், பார்வையை விசாலப்படுத்தி மானுட நேயத்துக்கு உழைத்த எல்லாரையும் சிறப்பித்திருக்கிறீர்கள். தங்கள் விசாலம் என்னை வியக்க வைக்கிறது. வ.உ.சி அவர்களின் நூல்களைத் தொகுப்பு நூலில் ஏற்கெனவே பார்த்து விட்டேன். ஆனாலும் உங்கள் பதிப்பு வ.உ.சியின் சிந்தனைகளில் மனம் குவிக்க உதவுகிறது. அவரைப் பற்றி தாங்கள் கொடுத்திருக்கும் பதிப்புரை, எண்ண அலைகள், இவையே அவரை நெஞ்சில் தேக்கிக் கொள்ள வழிகாட்டுபவை.

அண்ணாவின் அமுத மொழிகள் படிக்கப்படிக்க சுவை தருபவை, அவரைப் பற்றி நீங்கள் எழுதியிருப்பதும் இளைஞர்களுக்குப் பெரிதும் உதவும்.



अन्तर्देशीय पत्र कार्ड
INLAND LETTER CARD

செ. திவான் எம்.ஏ., எம்.பில்
106 F/4A திருவனந்தபுரம் சாலை
பாளையங்கோட்டை
திருநெல்வேலி மாவட்டம்
पिन PIN 627002

इस पत्र के अन्दर कुछ न रखें NO ENCLOSURES ALLOWED
पते में पिन कोड लिखें WRITE PIN CODE IN ADDRESS
प्रेषक का नाम और पता SENDER'S NAME AND ADDRESS :—
629 501.
पिन PIN

PHILATELY: KING OF HOBBIES
COLLECT INDIA POSTAGE STAMPS
CONTACT: Nearest Philatelic Bureau

ஆசைத்தம்பி, சித்ரரசு, கே.வி.கே. சாமி,
போன்றோர் திராவிடர் கழகத்துக்கு அதன் தோற்ற காலத்தில்
கடுமையாக உழைத்தவர்கள். அவர்களின் வரலாறு,
இன்றைய தலைமுறைக்குத் தெரியாமல் போயிருக்கக் கூடும்.
திராவிட இயக்கத்தினர் செய்ய வேண்டிய வரலாற்றுக்
கடமையை தனி ஒரு மனிதராக நீங்கள் சிறப்பாகச்
செய்து முடித்திருக்கிறீர்கள்.

உங்கள் பணிகளின் அகலத்தையும், ஆழத்தையும்
கவனிக்கும் போது உங்களுக்கு நம் பல்கலைக்
கழகங்கள் போட்டிபோட்டுக் கொண்டு டாக்டர் பட்டம் வழங்கி இருக்க வேண்டும்

பொன்னீலன்
சாகித்ய அகாதமி
விருது பெற்ற எழுத்தாளர்

15/33, மணிகட்டிப் பொட்ட
நாகர்கோவில் வழி
பேச : 04652

நாள் 28.07.09

திரு. செ. திவான் அவர்கள்,
பாளையங் கோட்டை,

அன்பு மிக்கச் சகோதரர் அவர்களுக்கு

வணக்கம். 'வைகோ - வெற்றிப்பாதை வீரச்சங்கொலி' நூல் கிடைத்தது. படித்தேன். வைகோ அவர்கள் பல்வேறு சூழல்களில் ஆற்றிய உரைகளின் முக்கியப் பகுதிகளைத் திரட்டித் தந்திருக்கிறீர்கள். அருமையான முயற்சி. வைகோவின் உள்ளக் கிடக்கையைப் புரிந்துக் கொள்ள, அவரை உணர்ந்துக் கொள்ள சிறந்த நூல்.

வைகோ அவர்கள் மீது எனக்கு ஆழ்ந்த ஈடுபாடும், மதிப்பும் எப்போதும் உண்டு. திராவிட இயக்கத்தில் உறுதியும், தெளிவும் மிக்கவர் அவர். அவர் பேச்சு இதயங்களைத் தூண்டி, நரம்புகளை முறுக்கேற்றும். அவருடைய துணிச்சல் அரிது. பெரியார் சிந்தனைகளைப் பெரிதும் உள்வாங்கிக் கொண்டவர் அவர். இப்படிப்பட்ட ஒருவர் எப்படி இந்துத்துவச் சிந்தனையின் பக்கம் சாய்ந்தார் என்பதுதான் புரியாத புதிர். அதில் இருந்து


INLAND LETTER CARD

செ. திவான் அவர்கள்,
148 திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை,
627002.

PALAYANKOTTAI DELY 627002

விடுபெட்டு, தன் பார்வையில் தொடர்வது மிகுந்த மனநிறைவு தருகிறது. தங்கள் நூல் வைகோவின் புகழை பரப்பும். உறுதிப்படுத்தும். நூல் வடிவம் மிக அருமை.

என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

அன்புடன்.

Ponneelan

Novelist
Sahithya Academy Awardee

15/33, Manikettipottal,
Eathamozhy – 629 501.
Kanyakumari District, Tamil Nadu.
Ph: 04652-250328, Cell: 94437-91644.

18/09/09

செ. திவான் அவர்கள்,
பாளையங்கோட்டை

அன்புமிக்க சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் எழுதிய "அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி" நூல் இன்று கிடைத்தது. அதன் முகப்பில், என்னைப்பற்றி பதில் மரியாதைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஒரு குற்ற உணர்வாக இது என்னை வாட்டிக் கொண்டிருக்கத்தான் செய்கிறது. ஏ.வி.பி. ஆசைத்தம்பி சி.பி. சிற்றரசு முன்னுரையும் வாசித்தேன். மற்ற நூல்களில் சில பகுதிகள் படித்தேன்.

நான் 11 ஆண்டுகளாக உழைத்துக் கொண்டிருக்கும் நாவலை இரண்டாக வடிவமைத்துச் செப்பம் செய்து கொண்டிருக்கிறேன். நாவல் தட்டச்சு செய்யப்பட்டு இந்த மாதம் பிழை திருத்தினேன். எப்போதாவும் அது என்னை வேலை வாங்கும் போலும், என்று தோன்றுகிறது. அதை முடித்துவிட்டு, உங்களுக்கு விரிவான கடிதம் எழுதவேண்டுமென்று இருந்தேன். மற்றபடி ஒன்றுமில்லை. சென்ற மாதம் வை.கோ. அவர்கள் பூதப்பாண்டி ஜீவா விழாவுக்கு வந்தார். வை.கோ.வைப்பற்றி நீங்கள் எழுதிய நூலைப் படித்துக் குறிப்பெடுத்து, அவரைப் பாராட்டினேன்.

இந்தப் பகுதிகளும் படிக்க வேண்டிய முக்கியமான பகுதிகள். வரும் மாதம் படிக்கத் தொடங்கிவிடுவேன். உங்களுடைய ஆற்றல் வியப்பளிக்கிறது. கனிவு நிறை உங்களுக்கு நன்றி கூறுகிறேன். திராவிட இயக்க வரலாற்றை மட்டுமல்ல, தமிழகத்தின் சிறந்த தலைவர்களின் வரலாறுகள், இலக்கியப் பெருமக்களின் வரலாறு, எல்லாவற்றுக்கும் சிறப்பாக அமைகின்றன உங்கள் நூல். உங்கள் படைப்பாற்றலைப் பாராட்டுகிறேன். வியப்புடன்

அன்புடன்
பொன்னீலன்

பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்

12/10/09

அன்புமிக்க பேரா. அவர்களுக்கு,

வணக்கம். "கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்" உங்கள் அருமையான நூல் கிடைத்தது. கச்சத்தீவு என்றும் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்பதை ஆதாரங்களோடு தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள். அதை இந்திராகாந்தி எந்தத் தேவையுமில்லாமல் இலங்கைக்குத் தானம் அளித்ததை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறீர்கள். தானம் கொடுப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் இது தொடர்பாக மத்திய அமைச்சரை செயலர்களை நேரில் சந்தித்துப் பேசியிருக்கிறார். அப்போதும் போராடுவது வரை போகாமல் இருந்திருக்கிறார் முதலமைச்சர். நாடாளுமன்றத்தில் தி.மு.க காரர்கள் 23 பேர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை. அன்று 181 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது தமிழ்நாடு சட்டமன்றம். தாரை வார்ப்புக்கு எதிராக தி.மு.க அரசு கண்டனத் தீர்மானம் எதையும் நிறைவேற்றவில்லை. எல்லாம் முடிந்த பிறகு ~~[illegible]~~ பயனற்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. வரலாற்றுப் பூர்வமாக இந்தக் கொடுமையை, இந்த வேதனையை, தெளிவாக அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறீர்கள்.

இந்த நூலால் தமிழகம் விழிப்படைய வேண்டும். ஆய்வாளர் திவான் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

அன்புடன்.

பொன்னீலன்
பொட்டல் - 629501 19 02/10

அன்புமிக்க சகோதரி அவர்களுக்கு,

வணக்கம். தேவநேயபா-வாணரின் கைத்தலக் கீர்த்தனம் நூல் கிடைத்தது. இனிய பாடல்கள். இசைமாலை-மாலை, அத்திமரத்துக்கிளை, வெள்ளைக் கிழமை, வெயில் நேரம், பாதி இரவு, முயல் பாரி பனிநனை, இப்படி அருமை அருமை யாய்ப் பாடல்கள். வரலாற்றுச் சிறப்புமிக்கப் பதிப்புரை. தேவநேயப் பாவாணரின் இன்னொரு முகத்தைக் காட்டும் அழகுள்ள பாட்டு நூல்.

பாடல்களைத் தொகுத்த அமர்ந்-தோ, குடும்பத்தினர் உதவியோ, சிதையாமல் பாதுகாக்கலாம்.

வரலாற்றைத் தோண்டித் தோண்-டி, வைரங்களைப் பட்டை தீட்டித் தரும் தங்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

அன்புடன்,
பொன்னீலன்

Ponneelan

Novelist
Sahithya Academy Awardee

15/33, Manikettipottal,
Eathamozhy - 629 501.
Kanyakumari District, Tamil Nadu.
Ph: 04652-250328, Cell: 94437-91644.

20.9.11

செ. திவான் அவர்கள் எம்.ஏ. எம்.ஃபில்,
வரலாற்று ஆசிரியர்,

அன்பான சகோதரர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். "கர்மவீரர் காமராசர், அறிஞர் அண்ணா, தமிழர் தலைவர் வைகோ" நூல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

தன்னலம் அற்ற, ஊழல் அற்ற, பொது வாழ்வுக்கு இலக்கணம் காமராசர்! அன்புக்கும் மனித நேயத்துக்கும் இலக்கணம் அண்ணா! மனித கம்பீரத்தின் இலக்கணம் வைகோ. காலம் தமிழகத்துக்குத் தந்துள்ள மூன்று முகங்களையும் அழகான ஒரு செண்டாக்கித் தந்திருக்கிறீர்கள்.

எங்கெங்கோ தோண்டி எடுக்கிறீர்கள் எவருக்கும் கிடைக்காத அரிய அரிய செய்திகள். அழகியலிலும் அழகியலான நடைச் சித்திரத் தொழிலாளியே உங்களை மனமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்.

பொன்னீலன்
15-33 மணிகட்டிப்பொட்டல்
ஈத்தாமொழி - 629 501
கன்னியாகுமரி
04652 - 250328

10/10/11

அன்பான சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். "உமறுப்புலவர் விருது" தங்களுக்கு அளித்து சிறப்பிக்கப்பட்டதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். என் மனமார்ந்த பாராட்டுதல்கள்.

ஆய்வுமுறையாக நீங்கள் தொகுத்திருப்பது இஸ்லாமிய இலக்கியப் பெரு வரலாறு. படிக்கப்படிக்க வியப்பு. இஸ்லாமிய இலக்கிய வரலாறு மட்டுமல்ல. பல்வேறு வரலாறுகளையும் பின்னுக்குத் தள்ளி-யிருக்கிறீர்கள். சிந்தனைகளாக நீங்கள் விதைக்கும் சிலம்புகள் - இறுதியாக நீங்கள் இஸ்லாமியரும் சமூகத்துக்கு வைத்திருக்கும் கோரிக்கை - இதுவே ஒரு பேராவணம். உங்கள் ஆற்றலைப் பாராட்டும் உயர் ஆவணம். - அன்பன்.

பொன்னீலன்
15-33 மணிகட்டிப்பொட்டல்
சுசீந்திரமொழி - 629 501
கன்னியாகுமரி
04652 - 250328

12/11/11

அன்பான சகோதரி அவர்களுக்கு,

வணக்கம். பாரதியோடு போட்டி போட்ட பாவலர்களின் அவன் பாடல்களை 'மின்னும் மின்னல்' என்ற பாடல்களையும் தங்கள் நூலில் படித்து மகிழ்ந்தேன். நாமக்கல்லாரின் முதல் பாடல்கள் நான்கும் சிறப்புத்தன்மை கொண்டவை. அழகு நிரம்பியவை.

அதோடு நாமக்கல்லார் மாதவையா ஆகியவரின் வாழ்க்கைக்குறிப்புகளையும் அழகுறத் தந்திருக்கிறீர்கள்.

பெருமக்களின் வரலாறுகளைத் தொகுத்து இலக்கிக் கொண்டிருக்கிறீர்கள் மிகப் பெரும் சாதனை இது. மனமாரப் பாராட்டுகிறேன்.

அன்புடன்

[signature]

பொன்னீலன்,
மணிகட்டிப்பொட்டல்,
629 501,
கன்னியாகுமரி மாவட்டம்.

13/3

அன்புள்ள சகோதரருக்கு
வணக்கம். "வ.உ.சி-யின் உயில்" என்னும் தங்களுடைய நூல் இன்று கிடைத்தது. படித்தேன். வ.உ.சி என்னும் தியாக சகாப்தத்தின் தொடக்கமும் முடிவும் எப்படி முரண்பட்டு போய் இருக்கின்றன. இவ்வளவு நெருக்கடிக்கு இடையிலும் தன் விஷயங்களில் அவர் எவ்வளவு நேர்மையாகவும் கறாராகவும் இருக்கிறார். ஒரு மாபெரும் மனிதனின் நொறுங்கிப்போன இன்னொரு பக்கத்தை தங்கள்



இதுவும் மிகப் பெருமையுடன் படம் பிடித்துக் காட்டுகிறது. வ.உ.சி. பற்றியும் [illegible] மாமனிதர் பற்றியும் நீங்கள் தொடர்ந்து வெளிப்படுத்தி வரும் செய்திகள் தமிழகத்தின் வரலாற்றை [illegible] மிக்க நேரிய முறையில் மென்மேலும் செழுமைப்படுத்தும். தங்கள் பணிகள் மதிப்புக்குரியவை. தொடர்க.

அன்புடன் வ.உ.சி. [illegible]

[illegible]



மணவை முஸ்தபா 24.11.92.

அன்புமிக்க வரலாற்று அறிஞர் திவான் அவர்கட்கு,

[illegible]

அன்புள்ள

மணவை முஸ்தபா

2012க்குப் பிறகு தொடர்ந்து பொங்கல் வாழ்த்தை அடியேனுக்கு தவறாது அனுப்பி வருபவர் அண்ணன் பொன்னீலன்.

2013 பெருந்துயரம்

2013 இல் அடியேனது இல்லத்தில் ஏற்பட்ட பெருந்துயரம் அதன் பின் அடியேன் நூல்கள் எழுதினாலும் அதனை முறைப்படி இலக்கிய ஆளுமைகளுக்கு அனுப்பி வைக்கவில்லை.

யாரையாவது பார்த்தால் அவ்வப்போது எளியேனது படைப்புக்களைத் தருவேன். அதனால் தான் 24.11.2012க்குப் பிறகு பொன்னீலனிடமிருந்து பொங்கல் வாழ்த்து தவிர வேறு எதுவும் வரவில்லை. அண்மையில் அவர்கள் வெளியிட்ட தன் வரலாறு நூலான என்னைச் செதுக்கியவர்கள் நூலில் எளியேன் பெயர் எப்படியோ வரவில்லை. எனக்குள் ஏற்பட்ட அந்த மனக்குறையை நானே சரி செய்து கொள்ள பொன்னீலனின் கடிதங்களை சிறு நூலாக்கி உள்ளேன் அவ்வளவு தான்!

- செ.திவான்.



ரெகான்
சுலைமான்
பதிப்பகம்